செய்தி வெளியீடு எண்: 380 நாள் 23.6.2011

**கிருஷ்ணா நதி நீர் வரத்தால் சென்னை நகருக்கு குடிநீர் தடையின்றி வழங்கப்படும்**

சென்னை மாநகரின் குடிநீர் தேவைக்காக, ஆந்திர மாநிலம் கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து கிருஷ்ணா நதிநீரை ஆண்டுதோறும் 12 டி.எம்.சி. என்ற அளவில், ஜூலை முதல் அக்டோபர் வரையும் மற்றும் ஜனவரி முதல் ஏப்ரல் வரையும் உள்ள மாதங்களில் ஆந்திர அரசு திறந்துவிடும் முறை நடைமுறையில் உள்ளது. அதனடிப்படையில், மாண்புமிகு தமிழக முதல்வர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இம்மாதம் 21ம் தேதி முதல் விநாடிக்கு 1000 கன அடி என்ற அளவில் கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து திறந்துவிடப்பட்ட கிருஷ்ணா நதிநீர் தமிழக—ஆந்திர மாநில எல்லையை 23.06.2011 மாலை 4.00 மணி அளவில் வந்தடைந்தது. மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கே.பி. முனுசாமி, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு.கே.வி.இராமலிங்கம், மாண்புமிகு கைத்தறி மற்றும் ஜவுளித் துறை அமைச்சர் திரு.பி.வி.ரமணா ஆகியோர் கிருஷ்ணா நதி நீரை மலர்தூவி வரவேற்றனர். அவ்வமயம் சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப., திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஆஷிஷ் சாட்டர்ஜி, இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர்.

கண்டலேற்றிலிருந்து திறந்து விடப்படும் நீரின் அளவு படிப்படியாக உயர்த்தப்பட்டு மாநில எல்லையில் குறைந்தபட்சம் விநாடிக்கு 1000 கன அடி நீர் வந்தடையுமாறு பார்த்துக் கொள்ளப்படும்.

தற்போது, பூண்டி நீர்த்தேக்கத்தில் 1,338 மில்லியன் கனஅடி தண்ணீர் உள்ளது. இதைத்தவிர, சென்னை நகருக்கு குடிநீர் வழங்கும் அமைப்புகளான சோழவரம் நீர்த்தேக்கத்தில் 91 மில்லியன் கனஅடியும், புழல் நீர்த்தேக்கத்தில் 1,999 மில்லியன் கனஅடியும், செம்பரம்பாக்ம் நீர்த்தேக்கத்தில் 1,832 மில்லியன் கன அடியும் தண்ணீர் உள்ளது.

தற்போது விடுவிக்கப்பட்டுள்ள கிருஷ்ணா நதிநீர் மற்றும் பூண்டி உள்ளிட்ட இதர நீர்த்தேக்கங்களில் உள்ள தண்ணீரைக் கொண்டு, சென்னை நகருக்கு இந்த ஆண்டு 2011 டிசம்பர் மாதம் வரை தடையின்றி தொடர்ந்து குடிநீர் வழங்க இயலும்.

**வெளியீடு: —**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**